**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 495/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேர்மன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 10$^{th}$, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் குத்தபாஞ்சானூரில் குடியிருந்து வருகிறேன். நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மைத்துனர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 01.09.2018 ம் தேதி, பகல் 02.30 மணியளவில் வழக்கமாக பால் எடுத்துக்கொண்டு எனக்கு சொந்தமான TN-72-AA-8628 என்ற பதிவெண் கொண்ட பிளாட்டினா இருசக்கரவாகனத்தில் நானும், எனது மைத்துனர் அ.சா.1 ம் சென்றோம். பிள்ளையார் கோவிலின் முன்பு வரும்போது, எங்களை வழிமறித்து " டேய் தேவடியா மவனே, சொல்லச் சொல்ல கேட்க மாட்டீயா ல, எங்க தெருவுல ஏன் ல பால் எடுக்க வந்த, தேவடியா கூதி மவனே உன்னை கொன்னா தான் நாங்க வியாபாரம் செய்ய முடியும்" என்று சொல்லி, அரிவாளால் எதிரி கெவிலிகுமார் என்னை வெட்ட வந்த போது, நான் பின் வாங்கி விட்டேன். நான் ஒதுங்கி விட்டதால், அ.சா.1 ஐ கொல்ல வேண்டும் என்று சொல்லி, எதிரி கெவிலிகுமார் அரிவாளால் அ.சா.1 ன் தலையை நோக்கி வெட்டினார்.

அதை அவர் இடது கையால் தடுத்ததில், அவரது இடது கை துண்டானது. நான் சத்தம் போட்டேன். சாட்சிகள் ஆறுமுக நயினார், இராமசாமி, சுப்பிரமணியன், பொன்ராஜ் ஆகியோர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1ஐ சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

எங்கள் ஊரில் பெரும்பான்மையாக நாடார் சமுதாயத்தை சேர்ந்த வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நான் நாடார் வகுப்பைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். 2ம் எதிரி மறவர் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எங்கள் ஊரில் மறவர் சமுதாயத்தை சேர்ந்வர்களின் வீடுகள் 50 இருக்குமா? என்றால் அதை விட குறைவாகத் தான் இருக்கும். 1ம் எதிரியின் சொந்த ஊர் நெட்டூர் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு நிறைய கொலை மற்றும் அடிதடி வழக்குகள் இருந்ததினால் அவர் ஊரை காலி செய்து விட்டு, எங்கள் ஊருக்கு வந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 1ம் எதிரி சம்பவத்திற்கு முன்பாக, 2ம் எதிரியின் வீட்டில் சுமார் ஒரு வருடம் இருந்திருப்பார். 1ம் எதிரி, 2ம் எதிரியின் சகோதரியை திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எங்கள் சமுதாயத்திற்கு ஊர் நாட்டாமை உண்டு என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எங்கள் ஊரில் யார், நாட்டாமையாக இருந்தார் என்று எனக்கு நியாபகமில்லை. சம்பவத்திற்கு முன்பு, எங்கள் சமுதாயக்காரர்களும், ஊர் நாட்டாமையும் சேர்ந்து ஆஜர் எதிரியிடம், "1ம் எதிரியை ஊரை விட்டு காலி செய்ய சொல்லுங்கள், அவர் இங்கு இருப்பதினால், அடிக்கடி போலீசார் வருகிறார்கள் மற்றும் சட்ட ஒழுங்கு பிரச்சனையும் ஏற்பட வாய்ப்புள்ளது" என்று கூறினார்கள் என்றும், அதற்கு 2ம் எதிரி, "அவர் இங்கு இருப்பது தான் அவருக்கு பாதுகாப்பு" என்று கூறி, மறுத்து விட்டார்

என்றால் சரியல்ல. என்னுடைய மைத்துனருக்கு பெண்கள் விஷயத்தில் பல பிரச்சனைகள் இருந்தது என்றால் சரியல்ல. அ.சா.1 ஒரு பெண்ணை கூட்டிச் சென்றதினால், ஆழ்வார்க்குறிச்சி காவல்நிலையத்திற்கு என்னையும் போலீசார் விசாரணைக்காக அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். எனது மைத்துனருக்கு கீழகுத்தபாஞ்சானூரைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் பழக்கம் இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் நானும், ஆஜர் எதிரி மற்றும் மணி ஆகியோர் பால் வியாபாரம் செய்து வந்தோம் என்றால் சரிதான். சம்பவத்திற்கு 2–3 மாதங்களுக்கு முன்பு மணி என்பவர் பால் வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக என் மீது கடையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தான் அவர் மீது புகார் கொடுத்திருந்தேன். பிரச்சனைக்கு முன்பு, பால் தேவைப்படும் போது நான் எதிரியிடம் பால் வாங்குவேன் என்றும், அதுபோல் எதிரியும் என்னிடம் பால் வாங்குவார் என்றாலும் சரியல்ல. எதிரி அவர் சமுதாயத்தை சேர்ந்த நபர்களைத் தவிர எங்கள் சமுதாயத்தை சேர்ந்த நபர்களின் மாடுகளிலும் பால் கறந்து வந்தார் என்றால் சரிதான். நான் எனது இருசக்கரவானத்திற்கு பின்னால் பெரிய கேரியர் வைத்திருந்தேன். வண்டியை ஓட்டுபவருக்கு ஒட்டியே பின்னால் அந்த கேரியர் இருக்கும் என்றால் சரிதான். நான் இருசக்கரவாகனத்திற்கு பின்னால் 40 லிட்டர் பால் கேன் வைத்திருப்பேன் என்றால் சரிதான். எனது வண்டியில் டேங்கில் யாரும் உட்கார முடியாது என்றால் சரிதான். நான் வண்டியை ஓட்டும் போது, எனக்கு பின்னால் பால் கேனை மட்டும் தான் வைக்க முடியும் என்றும், பால் கேனை வைத்திருந்தால் வேறு யாரும் அதில் உட்கார முடியாது என்றால் சரியல்ல. 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் கேன் வைத்திருக்கும் போது, அதற்கு பின்னால் யாரும் உட்கார முடியாது என்றால் சரியல்ல. அப்போது, அ.சா.1 பால் கேனிற்கு பின்னால்

தான் இருந்தார். நான் சம்பவ சமயத்தில் பயன்படுத்திய இருசக்கரவாகனத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு வரவில்லை. நான் சம்பவத்திற்கு பிறகு அந்த வண்டியை எடுக்கவில்லை. அந்த இருசக்கரவாகமானது, யார் பெயரில் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. நான் பால் கறவை 2 மணிக்கு ஆரம்பிப்பேன் என்றால் ஒன்றரை மணிக்கே ஆரம்பித்து விடுவேன். நான் 2– 2 1/2 மணியளிவில் பஞ்சாயத்து போர்டு தெருவில் பால் கறந்து கொண்டிருப்பேன் என்றால் நேரம் கொஞ்சம் முன்னால் அல்லது பின்னால் ஆகும். நான் சம்பவ சமயத்தின் போது, வடக்கு திசையிலிருந்து தெற்கு திசையை நோக்கி வந்து கொண்டிருந்தேன். எதிரிகள் ஹீரோ ேஹாண்டா பைக்கில் அங்கு வந்தார்கள். எதிரிகள் எந்த வாகனத்தில் வந்தார்கள், அதன் பதிவு எண் என்னது போன்ற விபரத்தை நான் போலீசாரிடம் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மறித்தவுடன் வண்டி கீழே விழுந்ததா? பால் கேன் கீழே விழுந்ததா? என்றால் வண்டியும், பால் கேனும் கீழே விழவில்லை. நான் வண்டியிலிருந்து 10 அடி பின்னால் சென்றேன். நான் சம்பவயிடத்திலிருந்து ஆயுதங்கள் எதையும் எடுக்கவில்லை. எனது மைத்துனரை, 1ம் எதிரி வெட்டும்போது குறுக்கே பாய்ந்து அவரை காப்பாற்றவோ அல்லது 1ம் எதிரியை பிடித்து அவரை காப்பாற்றவோ முயற்சி செய்தேனா? என்றால் 1ம் எதிரி எனது மைத்துனரை வெட்டுவார் என்று எனக்கு தெரியாது. நான் ஏற்கனவே பின் வாங்கி விட்டேன். 1ம் எதிரி எனது மைத்துனரை வெட்டிய பிறகு, 1ம் எதிரியை தாக்குவதற்கு நான் முயற்சி செய்யவில்லை. அந்த பதற்றத்தில் எனக்கு எதுவும் தோன்றவில்லை. கூச்சல் போட்டேன். இந்த சம்பவத்தில் எனக்கு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். எனது மச்சானின் காயத்திலிருந்து நிறைய இரத்தம் வெளியேறியது என்றால் சரிதான். காயம்பட்ட எனது

மைத்துனரை நான் தாங்கி பிடிக்கவில்லை. என்னுடைய ஆடையில் இரத்தக்கறை படியவில்லை என்றால் சரிதான். எனது மைத்துனர் காயம் அடைந்த பிறகு ஆம்புலன்ஸ் வரும் வரை சம்பவயிடத்திலேயே தான் இருந்தார். சம்பவத்திற்கு பிறகு, முக்கால் மணி நேரத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்ஸ் வர காலதாமதம் ஆகிறது என்று சொல்லி, அ.சா.1 ஐ தனியார் வாகனம் மூலம் சிகிச்சைக்கு அழைத்து செல்ல நானோ, ஊர்க்காரர்களோ முயற்சி செய்யவில்லை. எனது மைத்துனரின் துண்டிக்கப்பட்ட கையை ஆம்புலன்ஸிற்குள் கொண்டு சென்றது ஆறுமுக நயினார் மற்றும் இராமசாமி. நான் 108 ஆம்புலன்சில் எனது மைத்துனருடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. நேரடியாக திரவியம் மருத்துவமனைக்கு அன்று இரவு சென்று விட்டேன். நான் திரவியம் மருத்துவமனை செல்லும் போது, இரவு 08.00 மணியிருக்கும். எங்களது ஊரில் உடையார் மற்றும் காசி ஆகியோர்களைத் தெரியுமா? என்றால் அவர்கள் எனது மாமா மக்கள். எங்கள் ஊரைச் சேர்ந்த அருணாச்சலத்தை தெரியும். அவர் தான் ஐஸ் பெட்டியில் வைத்து துண்டிக்கப்பட்ட கையை கொண்டு சென்றார். அருணாச்சலத்தை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் திரவியம் மருத்துவமனைக்கு சென்றபோது, அ.சா.1 ற்கு அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருந்தது. அ.சா.1 ற்கு வலது கை பெருவிரலிலும் காயம் ஏற்பட்டிருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. எனது மைத்துனர் 2 நாட்கள் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார் என்றால் சரிதான். நான் எனது மைத்துனரை பார்க்கும் போது, வலது கை பெருவிரலில் மருத்துவமனை கட்டு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் சம்பவம்

நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ற்கு கீழகுத்தபாஞ்சானூர் பிள்ளையார்கோவில் முன்பு வைத்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. கீழகுத்தபாஞ்சானூர் ஊரைச் சேர்ந்தவர்கள் தான் அ.சா.1 ஐ ஆம்புலன்ஸை வரவழைத்து, அவரை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸில் எங்கள் ஊரைச் சேர்ந்த யாரும் செல்லவில்லை என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ் ஊழியர்கள் தான் அ.சா.1ன் கையை பத்திரமாக எடுத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. என் முன்பாக வைத்து அ.சா.1 ற்கு காயம் ஏற்படவில்லை என்றும், அதனால் தான் எனக்கு காயமோ அல்லது எனது சட்டையில் இரத்தமோ படியவில்லை என்றால் சரியல்ல. கீழகுத்தபாஞ்சானூரைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் அ.சா.1 ற்கு ஏற்பட்ட கள்ளத்தொடர்பு காரணமாக நடந்த தாக்குதலில் தான் அ.சா.1 ற்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. கீழகுத்தபாஞ்சானூரைச் சேர்ந்த நபர்கள் மீது புகார் கொடுத்தால் எங்கள் ஊருக்கும், கீழகுத்தபாஞ்சானூரைச் சேர்ந்த மக்களுக்கும் ஜாதி ரீதியாக பிரச்சனை ஏற்படும் என்று கருதி எங்கள் ஊர்க்காரர்களும், நாட்டாமையும் கலந்து பேசி, எதிரிகள் மீதிருந்த முன் விரோதத்தினால் அவர்கள் மீது காலதாமதமாக இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த 02.30 மணிக்கு 2ம் எதிரி வீடுகளில் பால் கறவை செய்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி என்னை வெட்ட வந்ததாகவும், 2ம் எதிரி அ.சா.1 ஐ வெட்ட தூண்டியதாகவும் கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் எங்கள் ஊர்க்காரர்கள் மற்றும் ஊர் நாட்டாமை சொன்னதின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.10 16:30:41 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 495/2021**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கந்தசாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 10th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் குத்தபாஞ்சானூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியாது. அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 02.09.2018 ம் தேதி, மதியம் 02.30 மணியளவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் இருசக்கரவாகனத்தில் எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் பக்கம் வந்துகொண்டிருந்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் இருவரும் முன்விரோதம் காரணமாக அவர்களை வழிமறித்து, தடுத்து நிறுத்தி கெட்ட வார்த்தைகளால் பேசி, 1 வது எதிரி அ.சா.1 ஐ "இத்தோடு தொலைந்து போ"

என்று சொல்லி அரிவாளால் வெட்டினார் என்றும், அதை அவர் இடது கையால் தடுத்தபோது, அந்த வெட்டு இடது கையின் மணிக்கட்டில் பட்டு கை துண்டாகி விட்டது என்றும், மீண்டும் தாக்கியதில் வலது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு பயந்து அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.10 16:30:49 +0530